சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No.

I.A.No.

MCOP.NO.334/2018

I.A.No.

HMOP.NO.

வாதி / பிரதிவாதி ம.சா.1 வது சாட்சி உதவியாளர் திரு.சுப்பிரமணியன் அவர்களால் 44/1969 பிரிவின்படி 28.02.2020 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :குப்புசாமி | கிராமம் | :வீரவள்ளி |
| த/பெ | :முத்துசாமி | தாலுாக்கா | :கிருஷ்ணராயபுரம் |
| மதம் | :இந்து | தொழில் | :கூலி |
| ஜாதி | :நாயுடு | வயது | :70 |

மு.வி.

நான் இந்த வழக்கின் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு 1 வது சாட்சியாவேன். எனது தரப்பு முதல் விசாரணையை பிரமாண பத்திரமாக தாக்கல் செய்கிறேன். அம்பிலிக்கை காவல்நிலைய கு.எண்.25/2018 முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1. இறுதி அறிக்கை ம.சா.ஆ.2. மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை 2 எண்ணிக்கை கொண்டது ம.சா.ஆ.3 வரிசை. பிரேத பரிசோதனை அறிக்கை ம.சா.ஆ.4. இறப்புச்சான்றிதழ் ம.சா.ஆ.5. வாரிசுசான்றிதழ் ம.சா.ஆ.6. ஆகியவற்றை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி.

விபத்தின்போது நான் அருகில் இல்லை என்றால் சரிதான். விபத்து எப்படி நடந்தது என்று தெரியாது என்றால் சரியல்ல. என் மகன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் என் மகனுக்கு சொந்தமானது. அதற்க காப்பீடு உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. காப்பீட்டு நிறுவனத்தை மனுவில் சேர்க்காததால் மனு குறைபாடு உடையது என்றும், மனு தள்ளுபடியாகவேண்டுமென்றால் சரியல்ல. என் மகனுக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் மகன் தான் ஓட்டுனர் உரிமம் இல்லாமல் வாகனத்தைஓட்டத்தெரியாமல் ஓட்டி 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. இந்த விபத்துக்கு என் மகன் தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்து சாலையின் மையப்பகுதியில் நடந்துள்ளதால் தான் போலீசார் தயார் செய்த மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்

மகனுக்கு திருமணமாகவில்லை. என் மகளுக்கு திருமணமாகவில்லை. வாரிசுசான்றிதழில் நான் மட்டும் தான் வாரிசுதாரராக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. என் மகன் மாதம் ரூ.15,000/–ம் சம்பாதித்ததாக வழக்கில் மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1, 2 எதிர்மனுதாரர்கள் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு மிக அதிகமானது கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

ஒம்/குப்புசாமி,
ஒம்/C.ஸ்ரீதர்,
சார்பு நீதிபதி,
குளித்தலை.

சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No.

I.A.No.

MCOP.NO.334/2018

I.A.No.

HMOP.NO.

வாதி / பிரதிவாதி ம.சா.2 வது சாட்சி உதவியாளர் திரு.சுப்பிரமணியன் அவர்களால் 44/1969 பிரிவின்படி 28.02.2020 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :தங்கராஜ் | கிராமம் | :சீலப்பாடி |
| த/பெ | :பழனிச்சாமிபிள்ளை | தாலுாக்கா | :திண்டுக்கல் |
| மதம் | :இந்து | தொழில் | :கூலி |
| ஜாதி | :பிள்ளைமார் | வயது | :63 |

மு.வி.

நான் இந்த வழக்கின் 3ம் நபர் ஆவேன். மனுதாரர் தரப்பு 2 வது சாட்சியாவேன். எனது தரப்பு முதல் விசாரணையை பிரமாண பத்திரமாக தாக்கல் செய்கிறேன்.

கு.வி.

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. மனுதாரர் கேட்டுக்கொண்டதன்பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். விபத்து சமயத்தில் என் முன்பு இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தார். விபத்து சாலையின் இடதுபுறத்தில் நடந்தது. எனக்கும், விபத்து நடந்த இடத்திற்கும் 40 மீட்டர் தூரம் இருக்கும். இறந்துபோனவர் லைசன்ஸ் இல்லாமல் வாகனத்தை ஓட்டத்தெரியாமல் வேகமாக ஓட்டியதால் தான் இந்த விபத்து நடந்தது என்று சொன்னால் சரியல்ல. நான் மெதுவாக சென்றதால் தான் என் மீது மோதாமல் வேகமாக சென்ற இறந்துபோன நபர் மீது மோதியது என்றால் சரியல்ல. வேறு நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கவில்லை. இறந்துபோன நபர் என்னுடைய உறவினர் என்பதால் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் விபத்தை பார்த்து இருந்தால் என்னை போலீசார் சாட்சியாக சேர்த்து இருப்பார்கள் என்றும், குற்றவியல் நீதிமன்றத்திலும் சாட்சியமளித்திருப்பேன் என்றும், என்னுடைய சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றால் சரியல்ல.

ஓம்/தங்கராஜ்,

ஒம்/C.ஸ்ரீதர்,

சார்பு நீதிபதி,

குளித்தலை.